இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 306 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 02 – திங்கள்கிழமை 16 ஜூன் 2025 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 306 : Thiruvalluvar Year - 2056 - Aani 02 - Monday 16 June 2025 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## இந்தியாவிலேயே

# எழுத்தறிவுத் திட்டத்தில் தமிழ்நாடு முதலிடம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜூன் 16 -**

**“எழுத்தறிவு பெறும் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து பயின்ற 5 லட்சம் பேர் தேர்ச்சி பெற்று, 100 விழுக்காட்டோடு இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



**முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 15+ வயதினர் அனைவரும் எழுத்தறிவு பெறும் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து பயின்ற 5 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்! 100% தேர்ச்சி விழுக்காட்டோடு தமிழ்நாடு இந்தியாவிலேயே ‘நம்பர் ஒன்’ இடத்தைப் பிடித்துள்ளது.**

**அறிவொளி ஏற்றும் இச்சாதனைக்கு உழைத்த பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

**நவம்பரில் 100 சதவிகிதம்!**

இந்நிலையில் வரும் நவம்பரில் தமிழகம், 100 சதவீதம் எழுத்தறிவு பெற்ற மாநிலமாக மாறும். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது” என, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கக இணை இயக்குனர் பொன் குமார் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், “பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் சார்பில், தமிழகத்தில், 15 வயதுக்கு மேற்பட்ட எழுத, படிக்க தெரியாதவர்களுக்கு, அடிப்படை எழுத்தறிவு கல்வி வழங்கும் வகையில், ‘புதிய பாரத எழுத்தறிவு திட்டம்’ 38 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் எழுத, படிக்கத் தெரியாதவர்கள் 35 லட்சம் பேர் இருந்தனர். இதுவரை, 20 லட்சம் பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். இன்று நடக்கும் தேர்வில், 5 லட்சம் பேர் பங்கேற்கின்றனர். மீதமுள்ள, 10 லட்சம் பேர், வரும், நவ., மாதத்திற்குள் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம், தமிழகம், 100 சதவீதம் எழுத்தறிவு பெற்ற மாநிலமாக மாறும்” என்று கூறியுள்ளார்.

## தலைவராக வழிகாட்டிய தந்தை!

‘தந்தையர் தினத்தை’யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளப் பதிவு!



சென்னை, ஜூன் 16 -

தந்தையர் தினத்தையொட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**தலைவராக வழிகாட்டிய தந்தை!**

**தந்தையாக நவீனத் தமிழ்நாட்டைச் செதுக்கிய தலைவர்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## டெல்டா மாவட்ட வேளாண்மைப் பணிகளுக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கல்லணையை திறந்து வைத்தார்!

**தஞ்சை, ஜூன் 16 -**

**டெல்டா மாவட்ட வேளாண்மைப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.06.2025) கல்லணையை திறந்து வைத்தார்.**

தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து கடந்த 12ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்ட காவிரி நீர், கல்லணைக்கு வந்து சேர்ந்தது.

இந்நிலையில் தஞ்சை டெல்டா மாவட்ட பாசன வசதிக்காக, கல்லணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

கல்லணையில் இருந்து டெல்டா மாவட்டங்களுக்கு காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய் ஆறுகள் மூலம் காவிரி நீரை பகிர்ந்து அளிக்கும் வகையில் கல்லணை திறக்கப்படுகிறது. இதற்காக, கல்லணையின் மதகுகள் சீரமைக்கப்பட்டுள்ளதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

திராவிட ஆட்சியின் நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் நேற்று (15.06.2025) தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்து மதியம் 3.00 மணியளவில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் விவசாயத்திற்காக கல்லணையில் தண்ணீர் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாலை 6.00 மணியளவில் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு எதிரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள “அகிலம் போற்றும் முத்தமிழறிஞர் கலைஞர்” அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

இன்று (16.06.2025) காலை 9.00 மணியளவில் தஞ்சை மஹாராஜா மஹாலில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

அதனைத் தொடர்ந்து காலை 10.30 மணியளவில் மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி வளாகத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இவ்விழாக்களில் மாவட்டத் திற்குட்பட்ட முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

